
# வாகரையின் வாணன்



ர. வினோத்காந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையின் வாணன்

ஆசிரியர்

ர.வினோத்காந்தன்

மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்தரவு

நூலின் பெயர் : வாகரையின் வாணன்

விடயம் : பனுவல்கள்

நூலாசிரியர் : ர. வினோத்காந்தன்

அளவு : A5

பக்கங்கள் : 37

முதற்பதிப்பு : 2023.11.18

அட்டை வடிவமைப்பு : ஓவியர் நிர்மலவாசன்

வெளியீடு : மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழாம்

அச்சுப்பதிப்பு : Enthroned Virgin Print Main Street Chenkalady

விலை : 200/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

வாகரைவாணன் எனும் அரியரெத்தினம் அரிய பல இலக்கிய முகங்களை உடையவர், ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு கலை நோக்கம் உடையது. இவ்வாறான ஓர் அறிஞர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பது நமது மண்ணுக்கு பெருமை தரும் விடயமாகும். கவிஞராக, ஆய்வாளராக, கட்டுரையாளராக, மொழிபெயர்ப்பு இலக்கியவாதியாக, சிறுகதை ஆசிரியராக, சிறுவர் இலக்கிய கர்த்தாவாக, வரலாற்று ஆசிரியராக, விமர்சகராக, நாடகத் தயாரிப்பாளராக, நெறியாளராக எனப் பல்வேறு பரிணாமங்களில் தமது ஆற்றலை வெளிப்படுத்தும் இவரின் கிழக்கிலங்கைத் தமிழகம் எனும் நூல் குறிப்பிடப்படவேண்டியதொரு சான்றாகும்.

இந்நூலானது வாகரைவாணனின் வாழ்க்கைத் தடங்கள், நாடகச் செயற்பாடுகள் மற்றும் அவரது நூல்களை அறிமுகப்படுத்துவதாகவும், வாகரைவாணன் என்பவர் யார்? இவருடைய நூல்கள், நாடகப் பணி மற்றும் கலைத்துவ சேவைகள் எத்தகையது என்பதை சமூகத்தினர் இனங்கண்டுகொள்ளவும் ஒரு வழிகாட்டியாக அமைகின்றது.

இவரால் எழுதப்பட்ட பனுவல்களை ஆராய்ந்து வாசிப்பதன் ஊடாக ஒரு நல்ல மனப்பதிவை பெற்றுக்கொள்ள முடிகிறது. இவரின் கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடல்கள், சிறுவர் இலக்கியங்கள், பத்திரிகை வெளியீடுகள் என்பனவற்றில் பொதிந்து கிடக்கின்ற கதைக்கரு. எழுத்துருவாக்கம் உணர்ச்சி வெளிப்பாடு, சிந்தனைச் சிதறல்கள் போன்றவற்றினை அவதானித்து, பல புதிய எழுத்தாளர்கள் கவிஞர்கள், நாடகஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் பிறப்பெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றுக்கும் மேலாக எனது எழுத்துக்கு வலுவூட்டியவர்களாகவும் பல்வேறு வகையில் எனக்கு உதவி செய்தவர்களாகவும் இருந்தவர்கள் எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழாம் எனது நண்பர்களும் மாவர்.இவர்கள் இல்லாமல் இந்நூலினை நான் வெளியிட்டிக்க முடியாது அந்தவகையில் பேராசிரியர்.சி.ஜெயசங்கர்,விரிவுரையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் எனது கற்றலுக்கு எப்பொழுதும் ஊக்கமும் உதவிகளும் செய்து வரும் எனது உறவினர்கள் மற்றும் குறிகிய காலத்துக்குள் அழகுற நூல் அட்டையினை வடிவமைத்து தந்த ஓவியர் நிர்மலவாசன் அவர்களுக்கும் நூலினை அச்சிட்டு வழங்கிய Enthroned Virgin Print Main Street Chenkalady எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ர. வினோத்காந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பும் எழுத்தும் எனச் சுருங்காத செயற்பாட்டு உலகின் சொந்தக்காரன்

வாகரைவாணன் அவர்களது எழுத்தும், செயலும், அறிவார்த்தமான தமிழ் கூறும் நல்லுலகிற்கு வளமான பங்களிப்பினை செய்வன. தமிழியல் தளத்தில் அவரது இயக்கம் பெரும் படிப்பினைக்குரியது.

தமிழ் மொழி சார்ந்தும் வரலாறு, பண்பாடு சார்ந்தும், மிக நீண்ட காலமாக தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆக்கங்களைத் தந்து கொண்டிருப்பவர். கட்டுரை, கவிதை, நாடகம் உட்பட நூலாக்கங்களில் மட்டுமின்றி கலை ஆக்கங்களிலும் ஆழ்ந்த பங்களிப்பு அவருடையது.

தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு சார்ந்து பிறரால் எழுதப்படும் ஆக்கங்களில் உடன்பாடின்மை காணப்படின் அதனை எதிர்கொண்டு தனது பதிற் கருத்துக்களை உடன் முன்வைப்பதிலும் விழிப்புணர்வுடன் இருப்பவர்.

வாகரைவாணன் அவர்களது எழுத்தும், வாழ்வும் அவரது செயற்பாடுகளின் வெளிப்பாடுகள். அவரது உலகம் வாசிப்பும், எழுத்தும் எனச் சுருங்கியதல்ல. இத்தகைய மனிதர்கள் எப்படி உருவாகிறார்கள்? தங்கள் கருத்து நிலைகளில் ஆழ்ந்தகன்ற அறிவும் தெளிவும், மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் பண்பாடும் இவர்களில் எப்படிச் சாத்தியமாகி இருக்கின்றது?
இத்தகைய மனிதர்களை இந்த உலகம் காணாது போய்க்கொண்டிருக்கின்றது. அவர்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

எனது சிறுபிராயம் முதல் பத்திரிகை, சஞ்சிகை, நூல் வாசிப்புக்களுக்குள்ளால் அறிமுகமான வாகரைவாணன் அவர்கள் இன்றைய தலைமுறையினர் அறியாத பட்டியலில் அடங்கி விடுவாரோ என்ற ஏக்கத்தை மிகவும் எதிர்பாராத விதமாக பல்கலைக்கழக மாணவன் ர.வினோத்காந்தன் தீர்த்து வைத்தார். இது அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஒரு புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினரான வினோத்காந்தன் தேடலுக்குள் படிப்பினைக்குரிய முதுசம் அறியப்பட்டிருப்பது சாதாரணமான விடயம் அல்ல. தனது மண்ணின் பேரறிஞனைத் தேடியிருக்கிறான், படித்திருக்கிறான், உரையாடியும் உறவாடியும் இருக்கிறான். ஆழ்ந்தகன்ற பேரறிஞனின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டிருக்கிறான் என்பது பெரு மகிழ்ச்சி. பரீட்சையே கல்வி என்று சுருங்கிய அறிவுலகில் அதையும் தாண்டியது அறிவு என்பது நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வாகரைவாணன் அவர்களது மனைவியாரும் உரையாடல்களில் ஈடுபாட்டுடன் பல பழைய விடயங்களை நினைவில் வைத்துப் பகிர்பவராக இருந்து கொண்டிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

பேராசிரியர்.சி. ஜெயசங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரைவாணன் வாழ்க்கைக் குறிப்புகள்



**01. பெயர்:** சந்தியாப்பிள்ளை அரியரத்தினம்

**02. புனை பெயர்:** வாகரைவாணன்

**03. மனைவி பெயர்:** அரியரத்தினம் மகேஸ்வரி

**04. தந்தை பெயர்:** பேதுருப்பிள்ளை சந்தியாப்பிள்ளை- (வாகரை, பனிச்சங்கேணி)

(பொலிஸ்விதானை (கிராம அதிகாரி) 1930-1957)

**05. தாய் பெயர் :** சந்தனம் சந்தியாப்பிள்ளை

**06. பிறந்த திகதி :** 22.12.1941

**07. அடையாள அட்டை இலக்கம் :** 4835702 அ

**08. தந்தை வழிப்பாட்டன் :** பேதுருப்பிள்ளை (உடையார்)

( மட்/ கோறளைப்பற்று வடக்கு (1930 -1949 )

( பொலிஸ் விதானை 1907 – 1930 )

**09. தாய்வழிப்பாட்டன் :** க.செ. கணபதிப்பிள்ளை

(பனிச்சங்கேணி பாடசாலையின் முதல் ஆசிரியர் 1930 க்கு முன்பு)

**10. கல்லூரி ஆசிரியர்:-** புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் (1982-1996)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. எழுத்துப்பணி ஆரம்பம்:-** 1956 ஆம் ஆண்டு (15 வயதில்)

**12. இதுவரை எழுதிய நூல்கள்:-** 42

**13. முதல் ஆங்கில நூல் வெளியீடு:-** 1989 ஆம் ஆண்டு "Culture and civilization",(யாழ்ப்பாணம்)

**14. முதல் தமிழ் நூல் வெளியீடு:-** 1970 ஆம் ஆண்டு "சுட்ட பொன்" (தமிழ் நாடு)

**15 கற்ற மொழி :-** தமிழ், ஆங்கிலம், லத்தீன், சமஸ்கிருதம் (ஓரளவு)

## 16. பத்திரிகைத்துறை

1. அருவி ( கையெழுத்துப்பிரதி இணை ஆசிரியர் மட்/சிவானந்த வித்தியாலயம் 1961-1962 )
2. "அன்னையின் குரல்" ஆசிரியர் (1968 "தொண்டன்" சஞ்சிகைக்கு முற்பட்டது)
3. "சுதந்திரன்" துணை ஆசிரியர் (1977-1980)
4. "உதயசூரியன்" ஆசிரியர் (1980-1981)
5. Patrician (புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழ் -ஆங்கில சஞ்சிகை ஆசிரியர்1989- 1992)
6. "போது" சஞ்சிகை ஆசிரியர் (1998-2008)

**17. திறமையுள்ள துறை**

1. கவிதை (மரபுக்கவிதை, புதுகவிதை)
2. நாடகம்
3. ஆய்வுக்கட்டுரைகள் (வரலாறு, மொழியியல், இலக்கியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிறுவர் இலக்கியம், காவியம் (வரலாற்று), நாவல் (நந்திக்கொடி, ஈழத்துப்பரணி)
5. சிறுகதை
6. மொழிபெயர்ப்பு

**18. பரிசு பெற்ற நூல்கள்**

1. சின்னச் சின்னப் பூக்கள் (இலங்கை அரசின் இலக்கிய விருது 1998)
2. அருளாளர் அந்தோனியார் (யாழ் இலக்கியப் பேரவையின் விருது 17.12.1994)
3. பாலர் தமிழ்ப்பாட்டு (யாழ் இலக்கியப் பேரவையின் விருது 17.12.1994)
4. கிழக்கிலங்கைத் தமிழகம் (எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு 2013 )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரை வாணனின் பனுவல்கள் ‑

## அறிமுகம்

ஈழத்து தமிழ் புலமைச் சூழலில் வாகரைவாணன் என அழைக்கப்படும் "சந்தியாப்பிள்ளை அரியரத்தினம்" என்பவர் தனித்துவமானவர். இவர் பத்திரிகை துறையில் அறியப்பட்டாலும் கல்வியியல், சமூகவியல், கலையியல், பண்பாட்டியல், இலக்கியவியல் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் முதலான துறைகளில் அதிக அக்கறையும் தீவிர ஈடுபாடும் கொண்டிருப்பவர். இத்துறையில் தொடர் ஊடாட்டம் காரணமாகப் பல்துறை ஆய்வுப் புலத்தில் நின்று கனகாத்திரமாக இயங்கி வருகின்றார். இன்றுவரை பல்துறை புலமையாளராக, பன்முக ஆளுமையாளராக தனது இருப்பின் அடையாளத்தை வெளிப்படுத்தியும் வருகிறார்.

வாகரை சமூகத்தினதும் அதன் வரலாறு தொடர்பான பல்வேறு உரையாடல்களையும் கருத்தாடல்களையும் உருவாக்குகின்றார். இவற்றை ஆக்கங்களாகவும் படைத்து வருகின்றார். தன்னுடைய சமூகப் பண்பாட்டின் சிறப்புகளையும் வரலாறுகளையும் பேசிவருகின்றார்.

ஈழத்து தமிழ்ப்புலமை பாரம்பரியம் பற்றி இவர் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் இவருடன் நான் மேற்கொண்ட நேர்காணலை அடிப்படையாக வைத்துக்கொண்டு நமது தமிழ் புலமை பாரம்பரியத்தில் "வாகரைவாணனின் அறிவுலக விரிவாக்கத்தை" நோக்குவதற்கான ஒரு முயற்சியாக இந் நூல் அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் தடங்கள்

நால்வகை நிலங்களைக் கொண்டதாக காணப்படும் கிழக்கு மாகாணத்தின் மத்திய பகுதியாக மட்டக்களப்பு மாவட்டம் விளங்குகின்றது. இதில் ஆத்மீக உணர்வும், கலை உணர்வும், சடங்கு முறைகளும் இணைந்து காணப்படும் கிராமங்களில் ஒன்றாக திகழ்வது வாகரையாகும். பயிர் செய் நிலங்களும், சடங்கு முறைகளும், கலைகளும், உணவு முறைகளும், கோயில்களும் என உள்ளூர் வளங்கள் நிரம்பிய ஒரு ஊராக வாகரை விளங்குகிறது.

வாகரைப்பிரதேசம் என்பது 16 கிராம சேவையாளர் பிரிவுகளைக் உள்ளடக்கியதோடு கிட்டத்தட்ட 25க்கு மேற்பட்ட சிறிய சிறிய கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. "எமர்சன் ரென்ற்" கூறுகையில் உப்பாற்றினை அண்டியுள்ள பனிச்சங்கேணி பரம்பரைக் கதைகளின் படி சிறந்ததொரு இராசதானியாக விளங்கியது. "வண்ணிச்சி நாச்சியார்" ஆட்சி செய்ததற்கான மாளிகைகள் ஒன்று இருந்ததாக கூறப்படுகிறது. இது காயங்கேணி புல்லாவிப் பகுதியில் அமைந்திருக்கின்றது. இவ்வாறான தனித்துவங்களைக் கொண்டதாக வாகரை பிரதேசம் காணப்படுகிறது.(பனிச்சங்கனி அரசி வண்ணிச்சி நாச்சியார பக், 2)

கலாபூசணம் சந்தியாபிள்ளை. அரியரத்தினம்(வாகரை வாணன்)12.22.1941 ஆண்டு பிறந்தவர். மரபுவழி நவீனங்களை உள்வாங்கிக்கொண்டு கவிதைகளைப் படைத்துள்ளார். அத்துடன் நாடகம், ஆய்வுக் கட்டுரைகள், சிறுவர் இலக்கியம், காவியம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள் என பல நிலைகளைக் கொண்டு தனது தனித்துவங்களை வெளிப்படுத்தி உள்ளார்.

வாகரை வாணன் தனது ஆரம்பக் கல்வியை வாகரை ரோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், இடைநிலை கல்வியை மட்/புனித மைக்கேல் கல்லூரியிலும், உயர் கல்வியை மட்/சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றார். இவரது கல்வித் திறமை காரணமாக முன்னாள் ஆயர் அமரர் "இக்னேஷியஸ் கிளனி யோ.ச ஆண்டகை" அவர்களால் இந்தியாவில் தமிழ்நாட்டு- சென்னை மாநிலத்திற்கு அனுப்பப்பட்டு சென்னை பல்கலைக்கழகத்தில் (வெளிவாரியாக) தமிழ் மொழியை துறைபோகக் கற்று "வித்துவான்" பட்டத்தை பெற்றுக்கொண்டார். இதன் விளைவாக ஆயர் பற்றியே இவரது முதலாவது வெளியீடாக "சுட்ட பொன்" எனும் கவிதை தொகுப்பு 1970 இல் வெளியிடப்பட்டது.

இவரது இந்த எழுத்து பணியானது 1956ம் ஆண்டு அதாவது (15 வயதில்) இருந்தே ஆரம்பிக்கின்றது. அதன் பின்னர் இலங்கை திரும்பி இவர் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த "சுதந்திரன்" "சத்தியவேத பாதுகாவலன்" ஆகிய பத்திரிகையில் கட்டுரைகள் எழுதியுள்ளார். 1982 தொடக்கம் 1996 வரையான காலப்பகுதியில் 'புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக கடமை ஆற்றினார். இவருடைய முதல் ஆங்கில நூல் "culture and civilization" 1986 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் கலை மரபுகளையும் மற்றும் நவீன கலை மரபுகளையும் ஒருங்கிணைத்து ஆய்வு செய்யும் பண்பை இவரது ஆய்வுத் துறையாகவும் பரிணாமம் பெற்றது. 1962 தொடக்கம் 2008 வரை யான காலப்பகுதியில் பத்திரிக்கை துறையில் ஆசிரியராக கடமையாற்றினார். 1961, 1962 ஆம் ஆண்டு 'அரு' (துணை ஆசிரியர்) எனும் கையெழுத்து பிரதியினை மட்/சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் போது வெளியிட்டார், 1968 ஆம் ஆண்டு "அன்னையின் குரல்" பத்திரிகையில் ஆசிரியராகவும், 1977 தொடக்கம் 1980 வரையுான காலப்பகுதியில் 'சுதந்திரம்' பத்திரிகை துணை ஆசிரியராகவும். 1980 தொடக்கம் 1986 "உதய சூரியன்" பத்திரிகையில் ஆசிரியராகவும், ஆங்கிலச் சஞ்சிகை ஆசிரியராகவும், 1989~1992 வகையான வரை பணியாற்றினார். மற்றும் 1998 தொடக்கம் 2008 வரை "பாதர் போல்ட்" தலைமையின் கீழ் 'போது' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. இதில் வாகரைவாணன் ஆசிரியராகவும் கடமையாற்றி பல வகையான ஆய்வு இதழ்களையும் வெளியிட்டுள்ளார், இவர் தனது கட்டுரைகளில் வாகரைப்பிரதேச குடிப்பரம்பல்களையும், முதல் குடிமகன்களையும், நாட்டார் மரபுகளையும், வாகரைப்பிரதேச தனித்துவங்களும் தனது எழுத்திலே அச்சுப்பதித்துள்ளார்.

1996க்கு பின்னர் மட்டக்களப்பு வந்து பல்வேறு இலக்கிய பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். இவரது வெளியீடுகளான 42 நூல்களையும் அவதானிக்கும் போது இவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இலக்கியத்தில் நின்று சாதித்து வருகின்றார் என்பது புலனாகிறது. சமூகம் மீது அக்கறை கொண்டதன் விளைவாக இன ஒருங்கிணைப்போடு சீர்திருத்தக் கதைகளை கருவாக் கொண்ட பல நாடகங்களை மேடை ஏற்றியுள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட சமூக தொடர்பு நிலையத்தின் வெளியீடான "தொண்டன்" சஞ்சிகையில் பல்வேறு இலக்கிய வடிவங்களை எழுத்தாற்றலை காண்பித்து வரும் இவர் வானொலியில் கத்தோலிக்கம் சார்ந்த நாடகங்களை நிகழ்த்தியும், உரையாடல்களி பங்குபற்றியும் வந்தார். இவர் தமிழ் மட்டுமின்றி ஆங்கிலம், இலத்தின், சமஸ்கிருதம் போன்ற பல் மொழிகளில் புலமை கொண்டவராக காணப்படுகின்றார்.

இலங்கை அரசாங்கத்தால் இவருடைய "சின்ன சின்ன பூக்கள்" எனும் சிறுவர் இலக்கியத்திற்கு "இலக்கிய விருது" 1998 ஆம் ஆண்டு வழங்கி கௌரவிக்கப்பட்டார், அதனைத் தொடர்ந்து "அருளாளர் அந்தோனியார்" கவிதை நூலுக்கு யாழ் இலக்கியப் பேரவையின் விருது 17.12.1994 ஆம் ஆண்டும்,"பாலர் தமிழ்ப்பாட்டு" சிறுவர் இலக்கியத்திற்கு யாழ் இலக்கியப் பேரவையின் விருதும் 17.12.1994 ஆம் ஆண்டு,கிழக்கிலங்கைத் தமிழகம் எனும் வரலாற்று நூலுக்கான விருதினை எழுத்தாளர் ஊக்கவிப்பு மையத்தினாலும் (மட்டக்களப்பு) பெற்றுபொன்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறையில் மேம்பாட்டிற்காக உன்னதமான சேவையாற்றிய கலைஞர்களை கௌரவிக்கு முகமாக இலங்கை அரசினால் வழங்கப்படும் உன்னதமான விருதான "கலாபூஷணம் விருது" இவருக்கு 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாண்டே "முதலமைச்சர் விருதும்" பெற்றார் கொழும்பு தமிழ் சங்கத்தினால் "தமிழ் நீதி விருது" அவர் ஆற்றிய தமிழ் பணிக்காக 2014 ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர்களால் "தொண்டன் சஞ்சீவி விருது", மட்டக்களப்பு மாவட்ட கலைஞர் கௌரவம், மூத்த எழுத்தாளர் கௌரவம் எனப் பலதரப்பட்டவர்களாலும் கௌரவிக்கப்பட்டவர்.

ஒரு உண்மையான உழைப்பாளரது இயல்புகள் இரண்டு. ஒன்று அழகை ஆராதிப்பது. மற்றது கொடுமை கண்டு கொதிப்பது. இந்த இரண்டு இயல்புகளுமே இவருள் ஐக்கியமாக இருப்பதனால்தான் இவரது எழுதுகோல் தொடர்ந்து இயங்குகின்றது. சூறாவளியாக வாழ்க்கை சில சமயம் சுழன்று அடித்தாலும் அதிலும் ஒரு வித சுகமே தெரிகிறது என்று இவரது எழுத்துக்கும் இயக்கத்துக்கும் இதுதான் உள்ளார்ந்த சக்தி என நம்பியவர்.

இவருடைய ஆக்கங்களை பாகுபடுத்தி பார்க்கின்றபோது 1970 தொடக்கம் இன்றுவரைக்கும் இவருடைய எழுத்தாணி எழுதிக் கொண்டே இருக்கின்றது. கவிதை, நாடகம், ஆய்வுக் கட்டுரை, சிறுவர் இலக்கியம், காவியம், சிறுகதை மற்றும் மொழிபெயர்ப்பு என அவற்றை பாகுபடுத்தி பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை**

- My country (ஆங்கில கவிதை) -2000
- கடற்கரைப் பூக்கள் -1983
- புதுக்கவிதைப் புத்தகம் -1998
- ஆசிரியன் ஓர் அட்சயப்பாத்திரம் -1992
- சுட்ட பொண் -1970
- பயணம் -1972
- எண்ணத்தில் நீந்துகிறேன். -1971
- தமிழ்ப்பாவை -1980
- சின்னச் சின்ன கதைகள் -1991
- தமிழ்ப் பாவை தைப்பாவை -2017
- கிறிஸ்து தத்துவம் - 1991

**ஆய்வுக் கட்டுரை, வரலாறு, மொழியில், இலக்கியம்)**

**வரலாறு**

- தமிழர் வரலாற்றில் சில பக்கங்கள் -1999
- வாகரை- ஒரு வரலாற்றுப் பார்வை -2003
- கிழக்கு இலங்கைத் தமிழகம். -2011

**சிறுவர் இலக்கியம்**

- சின்ன சின்ன பூக்கள் (சிறுவர் இலக்கிய விருது பெற்றது) - 1997
- நிலா வா நிலா -2000
- பாலர் தமிழர் பாட்டு -1993
- சின்னஞ் சிறு கிளியே - 2000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காவியம்**

- கிறிஸ்தவ இலக்கியம் ~1995
- இன்னாசியார் காவியம் ~ 2005
- மட்டக்களப்பு காவியம் ~ 2016

**சிறுகதை**

- அரசி உலக நாச்சியார் ~1998
- சிறுகதை விமர்சனம் ~1997
- பனிச்சங்கேணி அரசி – 2007

**ஆய்வுக் கட்டுரை**

- Culture and civilization ~1989
- சமயம் சில சிந்தனைகள் ~1997
- ஆய்தமிழ் ~2001
- இன்டர்நெட் தமிழ்
- இலக்கிய தமிழ் ~ 1989
- வாகரைவாணன் ஆய்வுக் கட்டுரை ~ 2017
- தமிழ் மண் மட்டக்களப்பு – 2019
- பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்பு தமிழ் ~2005
- தமிழர் வரலாற்றில் சில பக்கங்கள் ~ 1999
- தலை நிமிர்ந்து நிற்கும் தமிழ் ~ (வெளிவரவில்லை )

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

- விசுவாசத்தின் புதிய விடியல் ~1998
- ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமை பிரகடனம்
- அன்பில் மலர்ந்த பூக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் ஓய்வு மனப்பாங்கு கொண்டவர் அல்ல. எதையும் திட்டமிட்டு செயல்படுத்துபவர். தொடர்ந்து நேர முகாமைத்துவத்தை கடைபிடிப்பவர். சிந்தனையில் தாக்கம் செலுத்தும் மனவெழுச்சி மற்றும் பதகளிப்பு போன்றவற்றை விரட்டியடிக்கும் நேர்மையான வெழுச்சிக்கு தழுவிய நிலையில் குவி சிந்தனையை வளர்த்தெடுக்கும் திறன் கொண்டவர். இதனால் பிரச்சினைகளை விடுவிக்கும் சொப்பனமான தீர்வுகளை நோக்கி நகரக்கூடிய மன உறுதி மிக்கவர்.

வாசிப்பின் வழியாகவும் ஆய்வின் வழியாகவும் திரட்டப்பட்ட தரவுகள் மற்றும் அனுபவங்கள் பயனுள்ள செயல்வீச்சுகளை ஏற்படுத்தும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். இதுவே அவரது ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கான உள்ளீடுகளாகவும் அமைகின்றன. "வன்னிச்சி நாச்சியார்" உருவான வாகரைப்பிரதேச மக்களின் உரிமை, தனித்துவம் மற்றும் சிறப்பினை தனது எழுத்தில் பதித்துள்ளார். ஆளுமை உறுதியுடன் அதனை வன்மையாகவும் வளர்த்தெடுக்கவும் தன்னிலை முன்முயற்சியில் ஈடுபடுபவர்.

கனதியான வாசிப்பினாலும் வினைத்திறன் மிக்க எழுத்தினாலும் சிந்தனை வளம் பெறுகின்றது என்பதை அனுபவ ரீதியாக கண்டு வருபவர். இதனால் எப்போதும் வாசிப்பை தனது கற்றலுடன் இணைத்து வளர்த்துச் செல்வதே தனது நடைமுறையாகக் கொண்டு வருகின்றார். வாகரைவாணனின் 42 நூல்களை மையமாக வைத்து இந்த உரையாடல் இங்கே இடம்பெறுகின்றது ஒவ்வொரு நூல் மீதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டமாக வாசிப்பாக விரிவாக்கம் பெறவில்லை அதனால் கட்டுரை அதன் அறிமுக குறிப்புகளாகவே தொகுக்கப்படுகின்றது.

நாம் எழுத்தாளரை காட்டிலும் வாசகருக்கும் வாசிப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வாசிக்கப்படும் சூழல் எழுத்தாளருக்கும் வாசகருக்கும் இடையிலான ஊடகத்தின் தன்மை வாசிக்கப்படும் பனுவல் பற்றிய இதரப்பனுவல்களின் கருத்தாடல்கள் போன்ற இதுவரை முக்கியத்துவம் கொடுக்கப்படாத அம்சங்கள் எம்மால் பனுவலை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இந்தப் புரிதலின் அடிப்படையில் பனுவலின் அவசியத்தையும் அதன் தேவை பற்றி பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை வைத்துக்கொண்டு வித்துவான் பனுவல் பற்றிய அறிமுகத்தை எழுதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு இலங்கை தமிழகம்**

கிழக்கு இலங்கை தமிழகம். ஈழத்தில் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை பல்வேறு ஆதாரங்கள் மூலமாக நிறுவுவதை மையமாகக் கொண்டது. அத்துடன் வரலாற்று, தெரிவுகளும், மறைப்புக்களும், மறுப்புகளும் ஏற்படும் சூழல்களில் அவற்றை நிராகரித்து உண்மை நிலைகளை உணர்த்துகின்றது. இவர் நூலில் வரலாறு, மொழிபெயர்ப்பு, சொற்பொழிவு, சொற்பிறப்பாராய்ச்சி, மானிடவியல், தொல்லியல், பழந்தமிழ் இலக்கியம் என பல்வேறு துறைகளூடாக பல்வேறு அறிஞர்கள் கருத்துக்களையும். ஆதாரங்களையும், கிழக்கிலங்கை தமிழகத்தின் தொன்மைகளையும், சிறப்புகளையும் வெளிக்கொணர்ந்துள்ளார். குறிப்பாக அவை கிழக்கு இலங்கையின் ஆதிக் குடிகளாகத் தமிழர் வாழ்ந்தமையை உறுதிப்படுத்தவும் அதனை அறியவும் முடிகின்றது.

## வாகரைவாணனின் ஆய்வுக் கட்டுரைகள்

இந்த நூலானது மொழியியல் தமிழர் வரலாறு – பண்பாடு என இரண்டு தொகுப்புகளாக வகுக்கப்பட்டுள்ளது. மொழியியல் தொகுப்பில் பிறமொழிகளில் வழங்கு தமிழ்மொழிச் சொற்கள், சொல்லாய்வு உறுதிப்படுத்தும் மட்டக்களப்பு தமிழரின் தொன்மை, சரஸ்வதி, லட்சுமி, பார்வதி என்னும் பெயர்களின் விளக்கங்களும், மட்டக்களப்புத் தமிழ், ஆங்கிலச் சொற்களில் உருவாக்கத்திற்கு ஆதாரமான லத்தின் சொற்கள் ஆகிய கட்டுரைகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கியுள்ளது. இக்கட்டுரைகள் மொழியியல் ரீதியாக சொற்களை ஆராய்கின்றன சொற்களின் அடிகளை ஆராய்ந்து அதனூடாக பல உண்மைகளை வெளிக்கொணர்கின்றன. மேலும் பல்வேறு வழிகளில் ஈழத் தமிழர் வரலாறு சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் தமிழரின் வரலாறு எப்படி இருந்தது என்பதை வாகரைவாணனின் மொழியியல் ஆய்வானது எடுத்தியம்பும் என்பதில் ஐயமில்லை.

இரண்டாவது தொகுப்பான தமிழர் வரலாறு – பண்பாடு என்பது தமிழர் வரலாற்றில் சமயங்கள், தமிழ் இலக்கியத்தில் அறிவியல், மகாகவி பாரதியும் அறிவே தெய்வம் என்னும் உண்மையும், இளங்கோவின் கண்ணகியும் கம்பனின் இராமனும் போன்ற கட்டுரைகளைத் தாங்கியுள்ளது. இக்கட்டுரைகள் தமிழரின் பண்பாடு, வரலாறு என்ப வற்றை நோக்குகின்றன.

## தமிழ் மண் மட்டக்களப்பு

"தமிழ் மண் மட்டக்களப்பு" நூலானது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரித்து ஆட்சி செய்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் முழுமையாகவே இருந்தது. இந்தப் பற்றே அவர்களை ஒருவரோடு ஒருவர் முட்டி மோதவும் செய்தது. ஆயினும் இவ் மூன்று பேருக்கும் தமிழ் மண்ணே சுவாசமாகவும் விளங்கியது. இதனால்தான் வட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியப் பேரரசன் அசோகனால் கூட தமிழ் மண்ணில் அடி எடுத்து வைக்க முடியவில்லை. நாம் பிறந்து வளர்ந்த நம் பாரம்பரியத் தமிழ் மண் நமது சுவாசக் காற்றாகவே இருக்கக் காண்கின்றோம். இந்த உண்மையை சங்க காலத்திற்குப் பிற்பட்ட தமிழ்நாட்டுத் தமிழர்கள் (கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) புரிந்து கொள்ளாமையால்தான் வட இந்திய வைதிக, சமண, பௌத்த சமயங்களோடு அவற்றின் அடியாட்களும் தமிழ் மண்ணில் தொடர்ச்சியாகத் தடம் பதித்தனர். (இக்காலத்திலேயே புராண நூல்களில் மிகப் பழையதென்று கூறப்படும். "வாயு புராணம்" வடவர்களால் இயற்றப்பட்டது என்பர்.

1967 இல் தம் தாய் மண்ணுக்குத் "தமிழ்நாடு" என்று பெயரிட்டு சங்க காலத்தை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தத் தொடங்கினர். மலையில் வேட்டையாடினான். குறிஞ்சியில் இருந்து தமிழர் வேட்டைக் கலாசாரத்தில் வாழ்க்கையைத் மெல்ல முல்லைக்கு வந்து மருதத்திற்கு வந்தார். முல்லை என்பது காடு. குறிஞ்சி என்பது மலை. மருதம் என்பது நிலம். வயலும் வயல் சார்ந்த நிலமும்தான் மருத நிலம். அங்குதான் வேளாண்மை பிறந்தது. வேட்டைக் கலாசாரத்திற்கும் வேளாண்மைக் கலாசாரத்திற்கும் என்ன வேறுபாடு என்பதைத் தெரிந்து இந் நூலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பினை, 'புளியந்தீவு' என்னும் பெயர்ச் சொற்களை கொண்டு விளக்கியதோடு இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு அடுத்து பெருமளவில் தமிழர்கள் வாழும் தேசம் மட்டக்களப்பு ஆகும். மட்டக்களப்பில் வாழும் குடிகள் நாகர், வேடர், குறவர், இயக்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வரையறுக்கப்பட்டாலும் அந்நான்கு குடிமக்களும் ஓரினத்தார் என்பதனையும் வரலாற்றில் மட்டக்களப்புத் தமிழர் பற்றியும், தேசத்தில் நிலவும் சங்ககாலத் தமிழர் இயற்கை நெறிகளையும், பழந்தமிழ் இலக்கியத்தில் வழக்குகள் தமிழ்ச்சொற்கள். சங்ககாலத்தை நினைவுபடுத்தும் மட்டக்களப்பு கூத்துகள், நாட்டுப்புறப் பாடல்கள் மட்டக்களப்புப் பிரதேசச் சொற்கள், தேசத்தில் வழங்கும் தொல்காப்பியர் கூறும் பீசியும் முதுமொழியும் சொல், தமிழர் தொன்மை, தேசத்திலும் தமிழ்நாட்டிலும் வழங்கும் ஒரே மாதிரியான பழமொழிகள் சில என பாகுபடுத்தி பார்க்கக் கூடியதாக இந் நூல் அமைகின்றது.

**இனிக்குந்தமிழ்**

தொகுப்பு எல்லாமாகப் பதினொரு கட்டுரைகள் இதில் உள்ளன. இவை எல்லாம் இலக்கிய நயப்புக் கட்டுரைகள். அருமந்த இலக்கியப் படைப்புகளின் உயிர் நிலைகளைத் தொட்டுக்காட்டி, அந்த இலக்கிய அனுபவத்தைச் சென்று அடைவதற்கு வழி காட்டுகின்றவையாக இருக்கின்றன. வறுமையால் வாடும் புலவர்களையும் பாணர் களையும் கூத்தர்களையும் கொடை வள்ளல்களிடம் போய்ப் பரிசு பெற்று நலம்பெறும்படி புத்தி சொல்லி வழிகாட்டும் பாவனையிலே பழம்பாட்டுக்கள் சில உள்ளன. இப் பழம்பாட்டுகள் 'ஆற்றுப்படை' என அழக்கப்பட்டன. (ஆறு-வழி, படை-படுத்துவது). வள்ளல்களிடம் போய்ச் சேரும் வழியைக் காட்டுவன அந்தப் பழைய ஆற்றுப்படைகள். 'இனிக்குந் தமிழ்' ஓர் ஆற்றுப்படைதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டிதான். ஆனால் இது எந்த ஒரு தனி மனிதரிடமும் செல்வதற்குரிய வழியைக் காட்டவில்லை. தமிழ் இலக்கியம் என்னும் வள்ளலை எப்படி அணுகுவது என்று இந்த நூல் உணர்த்துகிறது.

## சின்னச் சின்னக் கதைகள்

இந் நூல் 1996.09.05 வெளிவந்தது. இது 33 சிறுவர் கதைகளை உள்ளடக்கியது. பல்வேறு வடிவங்களில் இலக்கியம் படைக்கப்படும் காலம் இது. இதனால் இலக்கியம், இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற 'புராதன இலக்கணச் சட்டம் இராமன் கை சிவதனுசு போல் இன்று வீழ்ந்து விட்டது. கவிதைத் தமிழ் – ஐரோப்பியரின் வருகையால் வசனத் தமிழ் ஆனதன் மிகப் பெரிய பயன் இதுதான். சிந்திக்க வைக்கும் , இந்தச் சின்னச் சின்னக் கதைகளில் உருவகங்கள் மட்டுமல்ல – சிறுகதைகளின் கூர்ம அவதாரங்களும் இருக்கின்றன.

## இன்னாசியார் காவியம்

இன்னாசியார் காவியம் 2005.01.14 வெளிவந்தது. இந்த முப்பெரும் ஜூபிலி ஆண்டிற்கு கட்டியம் கூறும் முகமாக –இயேசு சபைத் தாபகரின் வாழ்க்கையை அதன் வரலாற்றை –அச்சபையின் சிந்தனைகளை, செயற்பாடுகளை கவிஞர் வாகரைவாணன்' இன்னாசியார் காவியம்'' என இலக்கியம் படைத்துள்ளார்.

16ம் நூற்றாண்டில் ஆரம்பித்து இன்று 500 வருடங்களாக சமூகப் புரட்சியை மேற்கொண்டு வரும் இயேசு சபையை அதன் ஸ்தாபகரை கவிதை வடிவில் படைத்துத் தருகிறது. இக்காவியத்தை புனித இன்னாசியாரின் வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளவும், இயேசு சபையை அறிந்து கொள்ளவும், தமிழையும் கவிதையையும் மேலும் புரிந்து கொள்வதற்காகவும் இது அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்து தத்துவம்

கிறிஸ்து தத்துவம் நூல் 1991 வெளிவந்தது. இயேசுவின் போதனைகள் -தத்துவங்கள் நம் வாழ்விற்கு இன்றியமையாதவை. கவர்ச்சிகரமான நடையிலும் அமையும் தத்துவங்கள் இலகுவாகப் பதிகின்றன. இந்தவகையில் - எக்காலத்திற்குமான கிறிஸ்துவின் போதனைகளை சாதாரண வாழ்க்கையே தடம்புரண்டு விட்ட இக்காலத்தில் மக்கள் முன் வைத்த கவிஞர் வாகரைவாணன் அவர்கள் பாராட்டுக்குரியவர். அவர் நம் வாழ்விற்கு அடிப்படையான கிறிஸ்துவின் தத்துவங்களை கிறிஸ்தவதத்துவம் எனும் பெயரிலும் கிறிஸ்துவின் புகழ் எனும் தலைப்பில் உலகெலாம் போற்றும் யேசுபரன் பெருமையையும் கவிதைநடையில் ஒரே நூலாகத் தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக ஆசிரியரிடமிருந்து பார்வையாளர்களுக்கு இடைப்பட்ட நபர்கள் மூலம் பேசும் ஒரு வடிவமே எழுத்துருவாகும். நாடக எழுத்தாளராக விளங்குபவர் தம் மனப்பதிப்பை கருத்துக்களாக்கி நாடக எழுத்துருவாக உருவாக்குகிறார். நாடகம் வாழ்வதற்கு காரணம் அவற்றின் எழுத்துருக்களாலேயாகும். அந்தவகையில் வாகரைவாணன் தனது 15வது வயதில் எழுத்துலகில் பிரவேசிக்கின்றார். இன்று வரை தம் பணியை மிகச் சிறப்பாகச் செய்துவருகின்றார். இவர் தமிழ் எழுத்துலகில் எளிமை வாழ்வு நிறைந்தவராக விளங்குகிறார். சமுதாய விழிப்புணர்வுடன் சிந்திப்பவராகவும், தமிழ் பற்றுக் கொண்டவராகவும், தமிழ் வரலாற்றை அழியாது மீண்டும் புத்துயிரப்புடன் வாழ வழிசெய்கின்றார். இதற்காக பல்வேறுபட்ட நூல்களையும், கட்டுரைகளையும், நாடகங்களையும் எழுதி சமூகத்திற்கு தன்னை அர்ப்பணித்து வருகிறார்.

1995ம் ஆண்டிற்குப் பின் தமிழ் நாட்டில் இருந்து மணிராசன், மணியம்மை ஆகியோர் தலைமையில் மட்டக்களப்புக்கு வருகை தந்த நாடகக் குழுவினர் வாகரை றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையிலும், பின் பொதுமக்கள் உதவியோடு வேறு இடத்திலும் கொட்டகை அமைத்து "சத்தியவான் சாவித்திர", "நல்ல தங்காள்" ஆகிய இசை நாடகங்களை நடாத்தி மக்களின் அபிமானத்தைப் பெற்றவர். வாகரையில் இருந்து இந்நாடகக் குழுவினர் சில மாதங்களின் பின் தமிழ் நாடு திரும்பிய பின்னர் வாகரையில் அமரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.அன்னத்துரை அவர்களின் தலைமையில் ஒன்று கூடிய இளைஞர்கள் (பொ. மரியாஸ்தம்பி, மு. நடராசா, மு.தியாகராசா, ச.சத்தியரெத்தினம், ச.அரியரெத்தினம் (வாகரைவாணன்), லியோன் வேதராசா, அருமைநாதன், த.அருள்ராசா, செ. இராசநாயகம், செ அரியநாயகம். அருட்குணஞானசெல்வம், கு.அருவிநாயகம், க.கிருபராசா, நாகராசா, கு. சுந்தசாமி, கு. தம்பிநாதம், த.தேவசகாயம், செ.தேவநாயாகம் ஆகியோர்) ஒவ்வொரு ஆண்டும் நத்தார் திருநாளை முதன்மைப்படுத்தி வாகரை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையில் நாடகங்கள் அரங்கேற்றி ஊரில் பெரும் வரவேற்பை பெற்றன.

சமுதாயத்தோடு இணைந்து செயற்படுவதற்கும், மக்களுக்காக மக்களால் மேடையேற்றப்படும் சிறந்த ஊடகம் நாடகக் கலை எனத் தெரிந்து கொண்டு அப்பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவராக திகழ்கின்றார். நாடகம் என்பது அதனைப் பயில்வோருக்கும் நுகர்வோருக்கும் மன நிறைவைத் தருகின்ற ஒரு திறன் ஆகும். இது மனநிறைவு, கற்பனை, அழகியல் என மனிதரின் ரசனையோடு தொடர்புடைய விடயமாகும். வாகரைவாணன் அவர்கள் எங்கு சென்றாலும் அங்குள்ளோரைக் கொண்டு நாடகத்தை நெறிப்படுத்தி மேடையேற்றம் செய்வது இவருடைய விசேட இயல்பாகும். தான் வாழ்ந்த ஒவ்வொரு இடத்திலும் நாடகப் பணியை மேற்கொள்ள இவர் தவறவில்லை. இவர் சிறந்ததோர் நாடக எழுத்தாளராக திகழ்கின்றார். சிறந்த வாசிப்பும், தேடலும், ஆர்வமும், கற்பனைத் திறனும், சமுதாய நோக்கும் கொண்டுள்ளதாலேயே சிறந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்படைப்புடன் கூடிய தரமான நாடகங்களை இவரால் எழுத முடிந்தது. மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிய விழிப்புணர்வுடன் கூடிய நாடகங்களை எழுதினார்.

'சாஸ்திரமும் சமூகமும்' இவரது முதல் நாடகமாக விளங்குகின்றது. ஆனால் இது மேடையேற்றப்படவில்லை. இவரது இரண்டாவது நாடகம் "பவள நாடு காத்த பாலகன்" ஆகும். இந் நாடகம் 1958ல் வாகரையில் இவரது சிறிய தந்தையார் அன்னத்துரை அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது. க.பொ.த உயர் தரக் கல்வியினை மட்/சிவானந்த வித்தியாலயத்தில் மேற்கொண்ட இவர் அங்கு "கைதி" எனும் நாடகத்தினை எழுதி அவரது ஆசிரியர் கே.தியாகராசாவின் தலைமையில் மேடையேற்றினார். இதனால் அப் பாடசாலையில் இவருக்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்தது. கடந்த காலங்களில் வாகரையில் நிலைபெற்றிருந்த மத வேறுபாட்டை தவிர்க்கும் முகமாக "கல்லறை திறந்தது" எனும் நாடகத்தைக் கொண்டு அனைத்து மக்களையும் இணைத்து ஒற்றுமையாக வாழ ஊடகமாகப் பயன்படுத்தினார். ஒவ்வொரு இடத்திலும் நாடகங்கள் மேடையேற்றப்படும் பொழுது இடத்துக்கு ஏற்ற வகையில் அரங்கினை சிறப்பாக அமைத்து நாடகத்தினை மேடையேற்றினார். இவரது ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு விதமானவை ஆகும். அங்கு நாடகத்தை எழுதி மக்களின் ரசனைக்காக மேடையேற்றியமை இவர் நாடகத்தில் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் 1968ம் ஆண்டு வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றத்தை உருவாக்கி அதில் நாற்பதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை இணைத்து தம் நாடகப் பணியை மேற்கொண்டார். இவ் அமைப்பின் ஊடாக பல நாடகங்களை மேடையேற்றினார். மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்ட "துரோணர் சபதம்" நாடகத்தையும், பொலனறுவையை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்த பராக்கிரமபாகுவின் வரலாற்றை "புலத்திநகர புரவலன்" நாடகத்தையும், சேக்ஸ்பியரின் யூலியர் சீசர் நாடகத்திலே யூலியர் சீசர் இறந்த தினமான மார்ச் 15ம் திகதியை முன்வைத்து எழுதப்பட்ட "பங்குனி 15" (Ides of March ) எனும் நாடகத்தினையும் நெறியாள்கை செய்தார். சமூக அடிப்படையிலான "போராட்டம்", விடுதலை நாயகனாகிய யோவானின் வாழ்க்கையை எடுத்தியம்பும் "புரட்சித் துறவி" எனும் பல நாடகங்கள் மன்றத்தின் சார்பாக அரங்கேற்றப்பட்டவையாகும்.

வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் சார்பாக எழுதி இவராலேயே நெறிப்படுத்தப்பட்ட நாடகங்கள் மட்/மாநகர சபை, புனித மிக்கேல் கல்லூரி ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்றன. "புரட்சித் துறவி" எனும் நாடகமானது பல தடவைகள் பல்வேறு இடங்களில் மேடையேற்றப்பட்டன. 12.10.1968 ஆண்டு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடத்தப்பட்ட வீரமாமுனிவர் விழாவில் "துரோணர் சபதம்" "பங்குனி 15" ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவ்விரு நாடகங்களுக்கும் மக்களின் வெகுவான பாராட்டுக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். வித்துவான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்படிப்பிற்காக 1970ல் சென்னைக்கு சென்ற இவர் அங்கும் தம் நாடகப் பணியை தொடர்ந்தார். இதற்காக அங்குள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து பலவிதமான இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டார். 1975ம் ஆண்டில் பெங்களூர் குருமட மாணவர்களால் "ஒரு பூ மலர்கிறது" எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. தனது படிப்பிற்காக சென்று அங்கும் நாடக முயற்சிகளை சிறப்பாக செய்தார்.

ஏனைய கலைகளை போல் அவரது நாடகம் பலரையும் கூட்டு சேர்த்து இணைக்கும் ஓர் பாலமாக காணப்படுகின்றது. தான் செல்லும் இடமெல்லாம் தன்னோடு நண்பர்களை ஒனறிணைத்துக் கொள்வது நாடகத்தின் மிது கொண்ட பற்றினைக் காட்டுகின்றது. "பங்குனி 15" நாடகம் கிளிநொச்சியில் மேடையேற்றப்பட்டதுடன், "கல்லறை திறந்தது", "அக்கினி பரீட்சை" ஆகிய நாடகங்கள் மட்டக்களப்பிலும் மேலும் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டன.

வாகரைவாணன் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலே கற்பிக்கும் காலப்பகுதியில் கல்லூரி கலை பண்பாட்டு நிறுவகம் "தனிநாயகம் முத்தமிழ் மன்றம்" என்றே அழைக்கப்பட்டது. 1982ம் ஆண்டு அங்கு நடைபெற்ற பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய போது "புதுவையில் ஒரு பூங்குயில்" எனும் நாடகத்தை மேடையேற்றினார். அத்தோடு பாரதியார் பற்றி நீண்டதோர் உரையை ஆற்றியதை அறிகின்றோம். இவரால் எழுதப்பட்ட அனைத்து நாடகங்களும் சூழலுக்கு ஏற்ப அக்காலத்தில் (1984ல) பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இவரால் எழுதப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“போரா? சமாதானமா?” எனும் நாடகமானது மேடையேற்றப்பட்டு மாணவர்களின் பாராட்டையும் பெற்றது. யுத்த காலச் சூழ்நிலையில் வாழ்ந்த மக்கள் பல இன்னல்களை அனுபவித்தவேளையில் தங்களின் வாழ்விற்கான அர்த்தத்தை தொலைத்து விட்டு ஒரு விடிவை நோக்கி இருந்தவேளையில் இவரால் இந்நாடகம் எழுதப்பட்டது. நாடகம் அவர்களது வாழ்க்கை சூழலை வெளிக்காட்டும் விதமாக அமைந்திருந்தது.

கத்தோலிக்க மதம் தொடர்பான சம்பவங்களை தொகுத்து பல நாடகங்களை எழுதினார். ஒவ்வொரு நாடக எழுத்துருவும் தனித்தன்மையான பல அம்சங்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. அந்தவகையில் இயேசுவின் உயிர்ப்பு தொடர்பான கதையம்சத்தை “வெற்றித் திருமகன்” எனும் தலைப்பில் நாடக எழுத்துருவாக்கி அதனை மேடையேற்றினார். ஈசாக்கினை அக்கினியில் எரிக்க சென்றதனால் அந்நாடகத்திற்கு “அக்கினிப் பரீட்சை” எனும் பெயரிட்டு அரங்கேற்றினார்.

பிறருக்கு பழைய ஏற்பாடு கதையம்சத்தை அடிப்படையாகக் கொண்டு அக்கால சூழ்நிலையை எடுத்துக்காட்டும் நாடகமாக “கொற்றமும் சுற்றமும்” திகழ்கின்றது. குழந்தையை வெட்ட முற்படுகையில் கதறி அழுத தாய்க்கு சரியான நீதி வழங்கியமையால் அதற்கு “நீதி” எனும் தலைப்பினையும் வடிவமைத்துள்ளார். இயேசு பிறப்பினை எடுத்துக்காட்டும் “இயேசு ராத்திரி” நாடகமும் நாடக எழுத்துருவாக உருவாக்கப்பட்டு வானொலியில் ஒலிபரப்பானது. இத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள் மேடையேற்றப்பட்டதுடன் சில நாடகங்கள் நூல்களாகவும் வெளிவதுள்ளன. இவரால் எழுதப்பட்ட "துரோணர் சபதம்" என்னும் நாடகமானது 1972ம் ஆண்டு சென்னையில் நூல் வடிவம் பெற்றது. "ஒரு பூ மலர்கிறது" நாடகம் 1993.07.11 ல் யாழ்ப்பாணத்தில் நூல்வடிவம் பெற்று வெளிவந்தது. வாகரைவாணனால் கம்பரின் வரலாற்றை வெளிப்படுத்தும் "கவிச்சக்கரவர்த்தி கம்பர்" எனும் நாடகம் கலைமுகம் சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(நேர்காணல் வாகரைவாணன்.2023.9.)

இவரது நாடகங்களாக

- அக்கினிப் பரீட்சை
- கல்லறை திறந்தது
- ஒரு பூ மலர்கிறது
- புலத்தி நகர புரவலன்
- வெற்றித் திருமகன்
- கவிஞனின் காதலி
- புதுவை ஒரு பூங்குயில்
- போரா? சமாதானமா?
- கவிச்சக்கரவர்த்தி கம்பன்
- கொற்றமும் சுற்றமும்
- சாத்திரமும் சமூகமும்
- பவள நாடு காத்தபாலகன்
- கைதி
- துரோணர் சபதம்
- போர்ப் புயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பங்குனி 15
- போராட்டம்
- நீதி
- நல்லவன்
- நம்பினார் கெடுவதில்லை
- கடவுள் ஒரு கைதி
- மகாகவி பாரதி
- இயேசு ராத்திரி

போன்ற நாடகங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் பிரச்சினைகள் மற்றும் கிறிஸ்தவ கதைகளை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றன. இவரது முதலாவது நாடகமான "சாத்திரமும் சமூகமும்" (1967ம் ஆண்டு எழுதப்பட்டது) இதுவரை மேடை ஏற்றப்படவில்லை. ஆனால் இவருடைய நாடகமான "அக்கினிப் பரீட்சை" இந்தியாவில் தமிழ் நாட்டில் மேடை ஏற்றப்பட்டது. அத்தோடு இவரது நாடகங்கள் பல யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் மேடை ஏற்றப்பட்டதுடன் இவை அச்சுப் பிரதிகளாகவும், நாடக அளிக்கைகளாகவும் வெளிவந்துள்ளன.

பல்துறை விற்பனராக விளங்குகின்ற வாகரைவாணன் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், வரலாறு, சிறுவர் இலக்கியம் மொழிபெயர்ப்பு நூல்கள் எனப் பல்வேறு படைப்புகளை படைத்துள்ளார். மேலும் தேசிய கல்வி நிறுவகத்தினால் ஆரம்ப கல்வி அலகுப்பிரிவினால் வெளியிடப்படும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியிலும் வாகரைவாணனின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவாரமில்லாது ஆனால் மிக ஆணித்தரமாக, உறுதியுடனும், தெளிவுடனும் மொழி ரீதியிலும், வரலாற்று ரீதியிலும் சமகாலத்து முக்கியத்துவத்தையும், தேவையினையும் தொடர்ந்து பல தசாப்தங்களாக எழுதிவரும் வாகரைவாணன் ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் முக்கியமானவர் ஆவார். இவருடைய எழுத்துகள் விமர்சனங்களுக்கு அப்பால் எழுத்துலகில் தனக்கான தனித்துவத்தை எப்போதுமே தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உண்மையான உழைப்பாளர் இயல்புகள் இரண்டு ஒன்று அழகை ஆராதிப்பது மற்றது கொடுமை கண்டு கொதிப்பது இந்த இரண்டு இயல்புகளுமே இவருள் ஐக்கியமாக இருப்பதினால் தான் இவரது எழுதுகோல் தொடர்ந்து இயங்குகின்றது.

மூன்றாவது கண்
உள்ளூர் அறிவு, திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org